இந்து தமிழ்
THE HINDU

# கோவையில் ஓசோன் தின விழிப்புணர்வு

● கோவை

தமிழக வனத்துறை, எஸ்என்எம்வி கலை, அறிவியல் கல்லூரியின் இயற்பியல் துறை, அறிவியல் மன்றம் மற்றும் ஐஐசி ஆகியவை சார்பில் உலக ஓசோன் தின கருத்தரங்கம் கல்லூரி வளாகத்தில் நேற்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் போ.சுப்பிரமணி தலைமை வகித்தார். இயற்பியல் துறை தலைவர் க.லெனின்பாரதி வரவேற்றார்.

தொண்டாமுத்தூர் சமூக காடுகள் திட்ட வனவர்கள் கே.சாரம்மாள், டி.பிரியதர்ஷினி, எஸ். தியாகு, பி.பிரியதர்ஷினி ஆகியோர் கலந்து கொண்டு, ஓசோன் படலத்தை பாதுகாக்க வேண்டியதன் தேவை, பொதுப் போக்குவரத்தின் அவசியம், சமூக காடுகள் வளர்ப்பதன் அவசியம் மற்றும் உலக வெப்பமயமாதல் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

நிகழ்வின் முடிவில் ஐஐசி ஒருங்கிணைப்பாளர் எஸ்.செல்வ ஜெயந்தி நன்றி கூறினார்.

இதேபோல, கோவையில் உள்ள வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின் (ஐஎஃப்ஜிடிபி) கீழ் செயல்பட்டுவரும் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையத்தில் ஓசோன் படலத்தை பாதுகாப்பதற்கான சர்வதேச தினம் நேற்று கொண்டாடப்பட்டது.

ஐஎஃப்ஜிடிபி இயக்குநர் சி.குன்னிகண்ணன் இந்த நிகழ்வை தொடங்கி வைத்தார். ஓசோன் குறித்த புகைப்பட போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் இ–சான்றிதழ் வழங்கப்பட்டது. மேலும், விழிப்புணர்வு சுவரொட்டிகள் மற்றும் கையேடுகள் பள்ளி மாணவர்கள், பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

51. News in Tamil Hindu, Coimbatore, 17.09.2023, Ozone Day 2023 celebrations